World Food Programme
Programme Alimentaire Mondial
Programa Mundial de Alimentos
برنامج الأغذية العالمي

From the People of Japan

# Joint News Release

31 ஜுலை 2020

## பாடசாலை சிறுவர்களுக்கு வழங்குவதற்கு தகரத்திலடைக்கப்பட்ட மீன்களை வழங்கும் ஜப்பானின் உதவியை இலங்கை அரசாங்கமும், WFPஉம் வரவேற்கின்றன

**கொழும்பு:** தேசிய பாடசாலைகள் உணவு நிகழ்ச்சியின் கீழ் வரும் பாடசாலை மாணவர்களின் ஊட்டச்சத்து தேவைகளை நிறைவு செய்யும் வகையில் ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு 300 மில்லியன் யென்கள் (ரூ. 519 மில்லியன்) பெறுமதியான 388 மெட்ரிக் தொன் தகரத்திலடைக்கப்பட்ட மீன்களினை ஜப்பான் அரசாங்கம் அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

கொழும்பில் ஜப்பானிய தூதரின் உத்தியோகப்பூர்வ வாசஸ்தலத்தில் நடைபெற்ற நிகழ்வில், இலங்கைக்கான ஜப்பானின் பதில் தூதுவர் கிட்டாமுரா டொஷிஹிரோவும், இலங்கைக்கான ஐ.நா உலக உணவுத் திட்டத்தின் பிரதி வதிவிடப் பணிப்பாளரான அன்ரியா பெரார்டோ ஆகியோர் பரிமாற்ற ஆவணங்களில் கையெழுத்திட்டனர். இந்த நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் என். எச். எம். சித்ரானந்தா, கல்வி அமைச்சின் பாடசாலை நடவடிக்கைகளுக்கான மேலதிகச் செயலாளர் எல்.எம்.டபிள்யு. தர்மசேன மற்றும் கல்வி அமைச்சின் சுகாதாரம், மற்றும் ஊட்டச்சத்துக்கான பணிப்பாளர் ரேணுகா பீரிஸ் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

"இலங்கை மற்றும் ஜப்பான் அரசாங்கங்கள் பல ஆண்டுகளாக நம் நாடுகளின் மக்களிடையே பரஸ்பர ஆதரவான உறவோடு வலுவான பிணைப்பைக் கொண்டுள்ளன" என்று ஜப்பானின் இலங்கைக்கான பதில் தூதுவர் கிட்டாமுரா டொஷிஹிரோ தெரிவித்தார். "மார்ச் 2011இல், கிரேட் ஈஸ்ட் ஜப்பான் பூகம்பம் மற்றும் சுனாமிக்குப் பின்னர், 1 மில்லியன் அமெரிக்க டாலர் நிதி மற்றும் 3 மில்லியன் தேநீர் பைகள் நன்கொடை மூலம் இலங்கை அரசாங்கமும் அதன் மக்களும் ஜப்பானுக்கு தங்கள் ஒற்றுமையை வெளிப்படுத்தினர். ஜப்பான் வழங்கிய பதிவு செய்யப்பட்ட மீன்கள் இலங்கையால் ஆதரிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து பெறப்படுகின்றன, இது ஜப்பான் வழங்கும் தொடர்ச்சியான விநியோகத்தின் விரிவாக்கமாக, தேவையான காலங்களில் ஜப்பானுக்கு கை கொடுத்து உதவியதற்காக நமது இலங்கை நண்பர்களைப் பாராட்டுவதைப் பிரதிபலிக்கிறது. கொவிட் -19 இன் விளைவுகளுக்கு எதிரான எங்கள் கூட்டுப் போரில் ஐக்கியம் மற்றும் ஒற்றுமையின் உணர்வில் இலங்கைக்கு நாங்கள் தொடர்ந்து ஆதரவளிப்போம்'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஜப்பான் அரசு இலங்கை அரசாங்கத்திற்கு - WFP மூலம் - 388 மெட்ரிக் தொன் தகரத்திலடைக்கப்பட்ட மீன்களைக் கிடைக்கச் செய்கிறது, இது 270,000 பாடசாலை மாணவர்களுக்கு 19 மில்லியன் புரதம் நிறைந்த உணவைத் தயாரிப்பதற்கு போதுமானது. இந்த சமீபத்திய பங்களிப்பு 2021 - 2022 காலகட்டத்தில், பதிவு செய்யப்பட்ட மீன்களை பாடசாலை மாணவர்களுக்கு தொடர்ந்து வழங்குவதை உறுதிசெய்கிறது, இதற்கு மேலதிகமாக முன்னர் ஜப்பான் அரசு வழங்கிய தகரத்திலடைக்கப்பட்ட மீன்களின் தொகுதி அடுத்த ஆண்டு நடுப்பகுதி வரை நீடிக்கும்.

இலங்கையில் WFPஇன் பிரதி வதிவிடப் பணிப்பாளர் அன்ரியா பெரார்டோ கருத்து தெரிவிக்கையில், ''சத்தான உணவு நல்ல ஆரோக்கியத்திற்கு அடித்தளமாக இருக்கிறது, குறிப்பாக மாணவர்களுக்கு. "ஜப்பானில் இருந்து இந்த தாராளமான பங்களிப்பு பல இலங்கை குடும்பங்கள் கொவிட்-19ஆல் வருமானம் மற்றும் வேலை இழப்பு காரணமாக கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள ஒரு முக்கியமான நேரத்தில் வருகிறது. மீன் ஒரு சிறந்த புரத மூலமாகும், அதை பாடசாலை உணவில் சேர்ப்பதன் மூலம், குழந்தைகள் வளரவும், விருத்திக்கும் தேவையான சரியான ஊட்டச்சத்துக்களைப் பெறுகிறார்கள் என்பதை நாம் உறுதியாக நம்பலாம்'' எனத் தெரிவித்தார்.

போதுமான புரத உட்கொள்ளல் இல்லாததால், மாணவர்கள் மத்தியில் மெதுவான வளர்ச்சி, மோசமான கவனக்குறைவு மற்றும் நோய் எதிர்ப்பு சக்தி குறைதல் உள்ளிட்ட பல சுகாதார பிரச்சினைகள் ஏற்படக்கூடும். இலங்கையில், கொவிட்-19இற்கு முன்னர் 40 சதவீத ஆரம்ப நிலை பாடசாலை மாணவர்கள் மிகவும் மெலிந்தவர்கள் என்று ஊட்டச்சத்து ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. மீன் போன்ற புரதச்சத்து நிறைந்த உணவுகளை உட்கொள்வது குழந்தைகளின் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்ய உதவும்.

"இலங்கை அரசு பல தசாப்தங்களாக தேசிய பாடசாலை உணவு திட்டத்தை நடத்தி வருகிறது" என்று கல்வி அமைச்சின் செயலாளர் என்.எச்.எம். சித்ரானந்தா தெரிவித்தார். ''குழந்தைகள் ஆரோக்கியமாக இருப்பதை உறுதிசெய்யும் நோக்கில் இந்த திட்டம் உருவாக்கப்பட்டது, மேலும் அவர்களுக்கு வழங்கப்படும் கல்வி வாய்ப்புகளிலிருந்து உகந்த முறையில் பயனடைய முடியும். பாடசாலை உணவுத் திட்டத்திற்கு மேலதிகமாக பதிவு செய்யப்பட்ட மீன்களை வழங்கியதற்காகவும், பாடசாலை குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்துவதில் எங்களுக்கு ஆதரவளித்ததற்காகவும் ஜப்பான் அரசு மற்றும் WFPஇற்கு நன்றி கூறுகிறோம்'' என அவர் மேலும் குறிப்பிட்டார்.

2003 ஆம் ஆண்டு முதல் WFP ஆதரித்த தேசிய பாடசாலை உணவு திட்டம் கொவிட்-19 காரணமாக தூண்டப்பட்ட பாடசாலை மூடல்களால் 2020 மார்ச்சில் பாதிக்கப்பட்டது. ஜப்பான் அரசு, WFP மூலம், 2011 முதல் இந்த திட்டத்தை ஆதரித்து வருகிறது, சுமார் 1,500 மெட்ரிக் தொன் தகரத்திலடைக்கப்பட்ட மீன்கள் 1 பில்லியன் யென்களை விட அதிக மதிப்புடையவையாகும். இது உணவுத் திட்டத்திற்கு மேலதிகமாக வாரத்திற்கு இரண்டு முறை, பன்முகப்படுத்தப்பட்ட ஊட்டச்சத்து மற்றும் சுவை சேர்க்கிறது. WFP, ஜப்பான் அரசாங்கத்துடன் இணைந்து, தேசிய பாடசாலை உணவுத் திட்டத்தை மேம்படுத்துவதற்கு, இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளில் தொடர்ந்தும் ஆதரவளிக்கும்.

*புகைப்பட விளக்கம்: இலங்கைக்கான ஜப்பானின் பதில் தூதுவர் கிட்டாமுரா டொஷிஹிரோ மற்றும் இலங்கைக்கான WFPஇன் பிரதி வதிவிடப் பணிப்பாளர் அன்ரியா பெரார்டோ ஆகியோர் தகரத்திலடைக்கப்பட்ட மீன் நன்கொடை ஆவணத்தில், கல்வி அமைச்சின் செயலாளர் என். எச். எம். சித்ரானந்தா, கல்வி அமைச்சின் பாடசாலை நடவடிக்கைகளுக்கான மேலதிகச் செயலாளர் எல்.எம்.டபிள்யு. தர்மசேன, மற்றும் கல்வி அமைச்சின் சுகாதாரம், மற்றும் ஊட்டச்சத்துக்கான பணிப்பாளர் ரேணுகா பீரிஸ் முன்னிலையில் கையெழுத்திடுகின்றனர்.*

# # #

ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டம் உலகின் மிகப்பெரிய மனிதாபிமான அமைப்பாகும், இது அவசரகாலங்களில் உயிர்களைக் காப்பாற்றுகிறது, செழிப்பைக் கட்டியெழுப்புகிறது மற்றும் மோதல்கள், பேரழிவுகள் மற்றும் காலநிலை மாற்றத்தின் தாக்கத்திலிருந்து மீண்டு வருபவர்களுக்கு நிலையான எதிர்காலத்தை ஆதரிக்கிறது.

Facebook, Instagram மற்றும் Twitterஇல் எம்மைத் தொடருங்கள்: @WFPSriLanka

**மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:**

டான்யா ஜான்ஷ், WFP, தொ.பே. +94 769 102462

ஜப்பான் தூதரகம், econojpn@co.mofa.go.jp, தொ.பே.. + 94-11-269-3831